**இலங்கை கணிய மணல் லிமிடட் - 2023**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கணிய மணல் லிமிடட் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர்த்து, கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய எனது அபிப்பராயம் முனைப்பழியானது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதாணிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு 2012 சனவரி 10 ஆம் திகதி ரூபா 500 மில்லியன் தொகை வழங்கப்பட்டு இருந்ததுடன் வட்டியுடன் மொத்தம் ரூபா 517,421,448 ஆன தொகை கடந்த ஆண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது பதிவழிக்கப்பட்டுள்ளது. இந்த கடன் மீதியை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தீர்க்கப்பட்டிருக்காததுடன் இந்த வழக்கு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் வெளிபடுத்தப்படடிருக்கவில்லை. | எதிர்வரும் நிதி ஆண்டின் போது கணக்குகளில் உரிய வெளிப்படுத்தல்களை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய கூடுதலாக செலுத்திய செச் வரிப் பெறுமதி ரூபா 30,000,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் சுங்க திணைக்களத்திடமிருந்து கிடைத்த 2023 செப்தம்பர் 29 திகதிய மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் அத் தொகை ரூபா 33,000,000 ஆகையால் ரூபா 3,000,000 தொகை நிதிக்கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. | முற்பணக் கணக்கில் நிலவிய 2023 ஆண்டினுள் நிறுவனத்திற்கு பண்டகங்கள் கிடைத்துள்ள கொடுக்கல் வாங்கலாகும். இதனால் இந்த உருப்படிகளிற்காக confirmation அழைபிக்கவில்லை. எனினும் முற்பணங்களில் 2024 ஆண்டிற்கு GRN இடுவதற்கு தேவையான பண்டங்களும் இருந்தன. எதிர்வரும் ஆண்டின் போது இவ்வாறான பிரச்சினை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய செச் வரியை நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | கரையோர வளங்கள் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்தவ திணைக்களத்தினால் கம்பனியிற்கு கணிய மணல் அகழ்வதற்காக 2017 முதல் 2021 செப்தம்பர் 06 வரையான காலத்திற்குரியதாக விநியோகிக்கப்பட்டிருந்த 5 அனுமதிப்பத்திரங்கள் ஊடாக அகழப்பட வேண்டிய மண் கியுப் அளவை விஞ்சி மணல் அகழப்பட்ட காரணத்தினால் அத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 74,583,515 ஆன பெறுமதி 5 ஆண்டுகளில் செலத்துவதற்கு இணக்கப்பட்டிருந்தது. மிளாய்வாண்டினுள் ரூபா 15,960,707 நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதும் நடைமுறையல்லாத பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 58,622,808 மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமை கூற்றில் இலக்கம் 30 குறிப்பின் கீழ் ஒதுக்கமாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 15,966,703 ஆன தொகை குறித்த கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்காக கணிய மணல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் போது செலுத்த வேண்டியிருந்த தொகையின் வருடாந்த ஒதுக்கமாகும். | அனைத்து பொறுப்பக்களையும் கணக்கமுட செய்ய வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 13 முதல் 2024 திசெம்பர் 12 வரை 30,000 கணிய மணல் கியுப்களிற்காக ரூபா 15,000,000 செலுத்தி கரையோர பாதுகாப்பு திணைக்களத்திடமிந்து அனுமதிப்பத்திமொன்றை பெற்றுக் கொண்டிருந்ததுடன் கம்பனி 2023 திசெம்பர் 31 திகதி வரை 287 மணல் கியுப்களை அகழ்வு செய்திருந்தன. எஞ்சிய 29,713 மணல் கியுபிற்காக செலுத்திய ரூபா 14,856,500 தொகை ஏற்கனவே செலுத்தியதாக குறிப்பிட வேண்டிய போதும் செலவினமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு கணக்குகளை தயாரிக்கும் போது கடந்த ஆண்டில் இலாபத்திற்கு மற்றும் 2024 அனுமதிப்பத்திர கட்டண கணக்கிற்கு உரிய சீராக்கம் மேற்கொள்ளப்படும். | முன்னர் செலுத்திய செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் தீர்க்கப்பட்ட ரூபா 2,109,897 ஆன 24 கடன்கொடுனர் மீதிகள் மீளாய்வாண்டு இறுதி கடன்கொடுனர் மீதியினுள் உள்ளக்கியுள்ளதால் கடன்கொடுனர் அப் பெறுமானத்தால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படும் | கடன்கொடுனர்களுக்கான கொடுப்பனவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 314,586,495 இனால் குறைந்தமை மற்றும் ஏனைய நடைமுறை சொத்துக்கள் ரூபா 42,928,783 இனால் அதிகரித்த காரணத்தால் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு ஏற்பட்ட நேரடித் தாக்கமான ரூபா 271,657,712 தொகையை செம்மையாக்கி அதற்குப் பதிலாக ரூபா 473,522,169 பெறுமானம் நிதிப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த சீராக்கங்களை மேற்கொண்டு நிதிப் பாய்ச்சல் கூற்றை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். | இலங்கை கணக்கீட்டு நியம ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 24,805,590 ஆன வரித் தொகையிற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் கம்பனிக்கு ரூபா 24,805,590 அதாவது PAYE, VAT மற்றும் ESC வரிகள் நிலுவையாக காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணங்களின் பிரகாரம் 2012/13, 2014/15 ஆண்டுகளிற்காக செலுத்தவுள்ள நிலுவை வருமான வரி ESC உள்ளடங்களாக ரூபா 23,118,196 ஆகும். 2014/15 ஆண்டிற்கான நிலுவை வரி தொடர்பாக வரி மேன்முறையீடு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த மேன்முறையீடு தொடர்பாக தீர்வு கிடைக்கவுள்ளது. எவ்வாறாயினும் உள்நாட்டு இறைவரி தணைக்களம் VAT மீள் செலுத்தல்களில் இருந்து நிலுவை வரியை ஆண்டினுள் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வருமான வரி மற்றும் ESC இற்காக ரூபா 23,118,196 தொகையையும் VAT இற்காக ரூபா 1,596,306 தொகையையும் பதிலீடு செய்துள்ளது. இதன் காரணமாக அத் தொகையை கணக்குகளில் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்க முடியாது. | செலுத்த வேண்டிய வரி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 20 திகதிய இலக்கம் PED/P/2/25(1) கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக கூட்டிணைந்த சமூக பொறுப்பு (CSR) இற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 10,682,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | காலி மாவட்ட செயலாளரின் கோரிக்கையின் பிரகாரம் தென் மாகாணத்திற்கு வெள்ள அனர்த்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பணிப்பானர் சபை அங்கீகாரம் மற்றும் அமைச்சின் ஒருமைப்பாட்டுன் மீது ரூபா 6 மில்லயனான 2000 உலர் உணவு உள்ளிட்ட பண்டப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக இதுவரை பொது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.<br>கைத்தொழில் அமைச்சின் கோரிக்கை பிரகாரம் 2023 கைத்தொழில் கண்காட்சிக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது ரூபா 5 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது சமூக பொறுப்பு ஒன்றல்லாததுடன் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கை ஒன்றாக கருத முடியும். எதிர்வரும் ஆண்டுகளில் அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஒழுகான அங்கீகாரத்தின் மீது சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் சமூக பொறுப்புக்களிற்காக (CSR) செலவுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்துள்ள செயற்ப்பாட்டு கைநூலின் 3.5 ஆம் பந்தி | கம்பனியில் சேவையில் ஈடுபட்டுள்ள இரண்டு ஊழியர்கள் 2022 ஒக்டோபர் 17 ஆம் திகதி மற்றும் நவம்பர் 29 இலிருந்து ஒழுங்கான அங்கீகாரம் இன்றி கைத்தொழில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கைக்கு முரணாக அவர்களுக்கு சம்பளம், மேலதிக நேர கொடுப்பனவு, ஏனைய படிகள் மற்றும் ரூபா 293,500 ஆன உற்பத்தியின் மீதான ஊக்குவிப்பு | எமது நிறுவனத்தின் இரண்டு ஊழியர்கள் கைத்தொழில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலத்துமாறு கைத்தொழில் அமைச்சிற்கு அறிவிக்கப்ட்டுள்ளது.<br>எவ்வாறாயினும் LMS/ET/A/50 மற்றும் 2023.11.16 திகதிய செயலாளர் கைத்தொழில் அமைச்சை வினவிய கடிதம் மூலம் இது தொடர்பாக அறிவூட்டவும் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் உரிய கடிதங்களின் பிரதி காணப்படுகிறது. அமைச்சிற்கு | சுற்றறிக்கை பிரகாரம் விடுவிக்கப்பட்ட ஊழியர்களை திரும்ப கம்பனிக்கு அழைபிக்க வேண்டியதுடன் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படிகளும் உள்ளடங்களாக ரூபா 3,818,937 வெலுத்தப்பட்டுடிருந்தது. | தற்போது விடுவிக்கப்பட்டுள்ள சாரதி திருப்பி அழைப்பித்துள்ளதுடன் பிரதான அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். | |
| (இ) | 2004 மார்ச் 30 ஆம் திகதிய இலக்கம் சீஈ/பீடீசீபீ/14/02 கொண்ட திறைசேரி செயலாளரினது கடிதம் | | | |
| | | (i) வருகை படி மாதத்திற்கு ரூபா 500 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது மீளாய்வாண்டளவில் அதனை ரூபா 3,000 வரை அவ்வப் போது அதிகரித்துக் கொண்டிருந்ததுடன் அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது பிரதான அலுவலக ஊழியர்களிற்காக ரூபா 3,327,600 உம், புல்முடை இயந்திரசாலை ஊழியர்களிற்காக ரூபா 15,326,870 உம் வருகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | எம்மால் தற்போது செலுத்தப்படும் ரூபா 3,000 ஆன வருகை படிகள் தொடர்பாக பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பியதுடன் அதற்காக தேவையான அங்கீகாரம் அத் திணைகளத்தினால் எமக்கு வழங்கியுள்ளதுடன் எம்மால் உத்தேசிக்கப்பட்ட வருகை படியை அதிகரிக்கும் கோரிக்கைக்காக அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | திறைசேரி அங்கீகாரத்தின் மீது படிகள் அதிகரிக்கப்பட வேண்டும். |
| | | (ii) உணவுப் படிகள் ஒரு தினத்திற்கு ரூபா 35 தொகை அங்கீகரித்திருந்த போதும் திறைசேரி அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டளவில் ஒரு தினத்திற்கு ரூபா 200 தொகை வரை அவ்வப்போது அதிகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பிரதான அலுவலக ஊழியர்களிற்காக ரூபா 4,194,400 தொகையும் | எம்மால் தற்போது உணவுப் படிகளாக தினமொன்றிகு ரூபா 200 ஆக செலுத்தப்படும் படிகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள பொது திறைசேரியின் முகாமைத்துவ திணைக்களத்தினை தொடர்பு கொண்டதுடன் அதற்காக அத் திணைகளத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் எம்மால் உத்தேசிக்கப்பட்ட உணவுப் படிகளை அதிகரிக்கும் கோரிக்கைக்காக அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | திறைசேரி அங்கீகாரத்தின் மீது படிகள் அதிகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புல்முடை இயந்திரசாலை ஊழியர்களிற்கு ரூபா 246,920,100 தொகையும் உணவுப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை | | | |
| (i) 9 பந்தி | புல்முடை இயந்திரசாலையில் வழங்குனர் உத்தியோகத்தரிற்கு 2023 ஜூன் 10 திகதி முதல் 2023 திசெம்பர் 29 திகதி வரை 11 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 735,175 ஆன முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்திருக்காததுடன் அந்த பெற்றுக் கொண்ட முற்பணத்தை தீர்க்க முன் மீண்டும் முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இயந்திரசாலையில் சில பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் லோடர்களில் பராமரிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு முற்பணம் வழங்கப்படுகிறது. அநேகமாக முற்பணம் வழங்கப்படுவது நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவருக்காகும். இயந்திரசாலையில் அவசர முறிவுகள் மற்றும் அவசர தேவைபாட்டுகளிற்கு முன்னர் வழங்கிய முற்பணத்தை தீர்க்க முன்பதாக புதிய முற்பணம் வழங்கப்படுகிறது. அவ்வாறே முற்பணம் தீர்க்கும் தாமதமும் காணப்படுவதுடன் இதன் பின்னர் முற்பணம் வழங்கும் போது மற்றும் தீர்க்கும் நடவடிக்கைகள் 1/2020 பொது நிதி சுற்றறிக்கையின் 9 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் தற்போது அறவிடுவதற்கு மீதியொன்று இல்லை. | வழங்கிய முற்பணத்தை தீர்க்க முன்னர் மீண்டும் முற்பணம் வழங்கக் கூடாது. |
| (ii) 11 பந்தி | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிலையான சொதர்துக்கள் தொடர்பான வருடாந்த கணிப்பீட்டை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. | தவிர்க்க முடியாத காரணத்தால் நிலையான சொத்துக்கள் வருடாந்த கணிப்பீடு தாமதமானதுடன் 2024 ஜுலை 15 முதல் கணிப்பீட்டை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டை உரிய திகதியில் மேற்கொண்டு முடிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,050,724,331 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 6,160,424,037 ஆனது. அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 2,109,699,706 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ,ஏனைய தொழிற்பாட்டு செலவு ரூபா 404,231,368 இனால் குறைந்து மற்றும் நிதி வருமானம் ரூபா 624,794,615 இனால் அதிகரித்தருந்த போதும் விநியோக செலவுகள், நிருவாக செலவுகள் முறையே ரூபா 62,634,849 மற்றும் ரூபா 13,993,174 இனால் அதிகரித்தமையும் வருமானம் ரூபா 2,658,595,672 இனால் குறைந்தமையும் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரனமாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ விணைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரால் 2012 ஒக்டோபர் 22 திகதி சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 12/1383/527/012-1 கொண்ட அமைச்சரவை பத்திரம் மற்றும் 2020 பெப்ரவரி 12 திகதிய இலக்கம் අමප/20/0226/224/006 அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் மூலப்பொருள் வடிவிலான கணிய மணல் ஏற்றமதி செய்யப்படாது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு கம்பனி கவனம் செலுத்துவது அத்தியசியமென இனங்கண்டிருந்த போதும் கம்பனியினால் அதற்காக தேவையான நடவடிக்கைகளை கணக்காய்வு திகதிய 2024 மே 31 வரை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி சேர்க்கும் செயல்முறையுடன் தொடர்புடைய Zircon Power இயந்திரசாலைக்காக சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு கம்பனிக்கு பொருத்தமற்றதாகையால் குறித்த முன்மொழிவு TEC இனால் இரத்துச் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் மீண்டும் டெண்டர் கோர கம்பனி முடிவு செய்துள்ளது. தற்போது இதன் செயற்பாடுகள் அமைச்சு மட்டத்தில் இடம்பெறுற்று வருகின்றது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி ஏற்றுமதிக்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020-2022 காலப் பகுதியினுள் வெளித் தரப்பினரிற்கு செலுத்தியிருந்த ரூபா 1,322,750 ஆன 06 முற்பண மீதிகளை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தினால் வெளித் தரப்பினரிற்கு வழங்கிய ஆறு முற்பணங்களின் பெறுமதி ரூபா 1,322,750 பெறுமதியான முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | வெளித் தரப்பினரிற்கு செலுத்திய முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஆண்டு 3 இனை விஞ்சிய ரூபா 6,116,174 ஆன நானாவித 126 கடன்கொடுனர் மீதிகள் மீளாய்வாண்டு இறுதிவரை தீர்த்திருக்கவில்லை. | 2021, 2022 ஆண்டுகளில் நானாவித 126 கடன்கொடுனர் மீதிகளிற்காக ரூபா 6,116,174 தொகை விடுவிக்கப்படவுள்ளது. AMC ஆலோசனை பிரகாரம் குறித்த கடன்படுனர்களிடமிருந்து மீதிகளை உறுதிப்படுத்திய பின்னர் செலுத்த முடியுமானவற்றை செலுத்த மற்றும் மீதியை நிறுவன கணக்கிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | புல்முடை இயந்திரசாலை வளவில் காணப்பட்ட ரூபா 53,695,105 ஆன நான்கு வீல் லோடர்கள் மற்றும் ரூபா 800,000 பெறுமதியான ஒரு லொரி வண்டியும் 5 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று போடப்பட்டிருந்தன. | இயந்திரசாலை உற்பத்தி செயற்பாடுகளிற்காக இதற்கு பல ஆண்டுகளிற்கு முன்னர் பயன்படுத்திய இந்த லொரி வண்டிக்கு பல சந்தர்ப்பங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், குறுகிய காலத்தில் மீண்டும் தவறுக்குட்படுவதால் தற்காலிகமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | விளைவற்று காணப்படும் சொத்துக்களை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (உ) | கம்பனியின் வருடாந்த இலாபத்தில் 5 சதவீததை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படியாக பகிர்ந்தளிக்க 2005 பெப்ரவரி 14 திகதிய இலக்கம் DMS/IDEP/06/02 கொண்ட நிருவாக சேவைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இலாபத்தின் மீது செலுத்தப்படும் அந்த ஊக்குவிப்பு படிகள் பற்றி குறிப்பிடாது இல்மனைட் உற்பத்தியின் அடிப்படையிலான ஊக்கத்தொகையை இலாபத்தின் அடிப்படையில் செலுத்த 2022 ஆகஸ்ட் 2 திகதி திறைசேரியிடம் கோரியிருந்ததுடன் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2022 நவம்பர் 29 திகதிய இலக்கம் PED/I/LMSL/3(iii) கொண்ட கடிதத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் வருடாந்த இலாபத்தின் அடிப்படையில் ஊக்குவிப்பு படிகளாக ரூபா 193,679,110 தொகையும் இல்மனைட் உற்பத்தியின் மீது ஊக்குவிப்பு படிகளாக ரூபா 84,156,325 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டு ஆரம்பத்தில் 105,282 மெட்ரிக் டொன் கனிய மணல் கம்பனியிடம் காணப்பட்டதுடன் ஆண்டினுள் கம்பனி 111,286 மெட்ரிக் டொன் கனிய மணல் உற்பத்தி செய்திருந்தது. அவற்றில் 30 தசவீத கனிய மணல் அளவு மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. ரூபா 1,854,191,931 பெறுமதியான 187,951 மெட்ரிக் டொன் கனிய மணல் இருப்பு இயந்திரசாலை குதங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன் குதங்களின் கொள்ளவு மட்டத்தை விஞசுகின்ற காணரத்தால் இல்மனைட் உள்பத்தியை 2024 மே மாதமளவில் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. பிரதான கனிய உற்பத்தி இல்மனைட் ஆகும். 53,856 டொன்கள் மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டு ஆண்டின் இறுதியில் 78,287 டொன்கள் எஞ்சியிருந்ததுடன் இந்த இருப்பை விற்பனை செய்ய பொருத்தமான விற்பனை மேம்பாட்டு முறையை கம்பனியினால் பின்பற்றி இருக்கவில்லை. இல்மனைட் உற்பத்தியை | நிறுவனத்தின் வருடாந்த தேறிய இலாபத்தின் அடிப்படையில் வழங்கப்படும் போனஸ் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கொடுப்பனவு 5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/IDEP/06/02 கொண்ட 2005.02.14 திகதிய கடிதத்தை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 5% வருடாந்த போனஸ் படிகள் செலுத்தப்படுவது நிறுவனத்தின் மொத்த தேறிய இலாபத்தின் அடிப்படையில் ஆவதுடன் உற்பத்தி ஊக்குவிப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது அதன் போது நிலவிய போக்குவரத்து படியை அதன் பெயரில் அங்கீகரிக்க முடியாததன் மீது அதற்கான புதிய நடைமுறை தீர்வாக ஆகும். | கம்பனியின் ஊக்குவிப்புகளுக்கு சரியான முறைமை ஒன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு முறையொன்று கம்பனியினுள் செயற்படுத்தல் இந்த அசாதாரண உற்பத்திக்கு காரணமாக இருந்தமை தவிர்க்க முடியாததாகும். | | |
| (ஊ) | கம்பனிக்கு சொந்தமாக 13 லோடர் இயந்திரங்கள் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டினுள் 7 இயந்திரங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மற்றைய இயந்திரங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சேவையில் ஈடுபடுத்திய 06 இயந்திரங்களும் ஆண்டினுள் சுமார் 17,343 மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனி 21 வீல் லோடர் இயந்திர இயக்கனர்களை சேவையில் ஈடுபடுத்தி 2023 ஆண்டினுள் ரூபா 20,368,840 ஆன சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேரமாக செலுத்தப்பட்டு இருந்தது. உச்ச கொள்ளவுடன் 7 வீல் லோடர் இயந்திரங்களும் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது ரூபா 12,400 மணித்தியால வீதத்தில் வாடகை அடிப்படையில் பெற்ற லோடர் இயந்திரத்தையும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்ததாரரை தெரிவு செய்யும் போது மணித்தியாலத்திற்கு ரூபா 9,500 தொகை மதிப்பிட்டிருந்த போதும் மதிப்பிடப்பட்ட விகிதத்தை விட ரூபா 2,900 அதிக தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 17 முதல் 2023 திசெம்பர் 31 வரை வாடகைக்கு பெற்ற வீல் லோடரை 817.9 மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தி ரூபா 7,161,204 தொகை லோடர் இயந்திர வழங்குனரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | நிலையாக சேதமடைந்த நிலையில் பழைய ஆறு வீல் லோடர்கள் எம்மிடம் உள்ளன. PL-19, PL-21, PL-22, PL-23, PL-24 மற்றும் PL-25. இந்த அனைத்து லோடர்களும் சுமார் 10 ஆண்டுகள் பழமையானதுடன் கனிசமான திருத்தங்கள் தேவையாகும். அதற்காக கனிசமான செலவு ஏற்படும். அவற்றின் பயன்பாட்டு காலம் மற்றும் தேவையான திருத்தங்களிற்கு அதிக செலவுகளை மேற்கொள்வதுடன் இந்த லோடரை பொருத்துவதற்கு முதலீடு செய்வது பயனற்றதாக தெரிகின்றது. | காணப்படும் வீல் லோடர் இயந்திரங்களை தேவையானவாறு திருத்தி உச்ச கொள்ளவுடன் பயன்படுத்த வேண்டும். |
| (எ) | கம்பனிக்கு சொந்தமான புல்முடை, தெவிக்கள்ளு, பொடுவாகட்டு மற்றும் கோகிளாய் ஆகிய பிரதேசங்களில் 19.368 ஹெக்டயார் காணி அளவிற்குரிய 4 அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் ஆண்டினுள் மொத்த மணல் 89,129 மெட்ரிக் டொன் அளவு கம்பனியினால் அழந்திருந்ததுடன் 5 தனியார் தரப்பினர் தனியார் காணிகளில் அகழ்ந்த மொத்த மணல் 156,724 மெட்ரிக் டொன்கள் ரூபா 102,568,992 தொகைக்கு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அகழ்வுகளிற்கும் கம்பனிக்கு வழங்கப்பட்ட IML/A/HO/1623/LR/9 கொண்ட அகழ்வு அனுமதிப் பத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததாக கம்பனி கணக்காய்விற்கு அறிவித்திருந்தது. கம்பனிக்கு தேவையான கனிய மணல் அகழ்வதற்காக தேவையான அனுமதி வழங்கப்பட்டிருக்கையில் மற்றும் தேவையான வளங்கள் போதியளவு காணப்படும் போது வெளிதரப்பு | கம்பனிக்கு சொந்தமான புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்பட்ட 4 அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் காணப்படுவதுடன் அந்த அனுமதிப் பத்திரங்கள் புல்முடை, பொடுவாகட்டு, தெவிக்கள்ளு மற்றும் கோகிளாய் பிரதேசங்களிற்காக வழங்கப்பட்டுள்ளன. இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் போது 4 மீற்றர் வரை உள்புறமும் கடற்கரை மற்றும் நிலத்தை நோக்கி 100 மீற்றர் வரையிலும் அகழாய்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொடவகட்டு, தெவிக்கல்லு பிரதேசங்களில் அகழ்வு மேற்கொள்ளப்படவில்லை. புல்முடை கடற்கரையோரத்தில் தனியார் வழங்குனர்களிடமிருந்து மணல் பெற்றுக்கொள்ளும் போது | தனியார் காணி அகழ்வு செய்யும் போது சரியான விகிதங்களை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நபர்களிடமிருந்து மணல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை சர்ச்சைக்குரியதாக இருந்தது. | அந்த வழங்குனர்களின் உரிய காணி அனுமதிப்பத்திர எல்லையினுள் அதாவது 100 மீற்றருக்குள் அமைந்துள்ளதால் மீண்டும் அதற்காக அனுமதிப்பத்திரம் பெறத் தேவையில்லை. அந்த காணியினுள் அதிக கனரக கனிய மணல் படிவுகள் காணப்படுவதன் காரணமாக அந்த காணி உரிமையாளரின் பூரண இணக்கப்பாட்டுடன் குச்சவெளி பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் மீது சரியாக மற்றும் ஆக்கபூர்வமாக கம்பனியினால் குறித்த அகழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. | |
| (ஏ) | வியாபார மற்றும் ஏனைய் கடன்கொடுனர் கணக்கில் உள்ளடங்கும் 2013, 2015, 2016 ஆண்டுகளிற்குரிய ரூபா 3,888,487 ஆன நிர்மாண மற்றும் திருத்தங்களிற்கான நிறுத்தல்கள் (Retention) மீளாய்வாண்டு இறுதிவரை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2013, 2015, 2016 ஆண்டுகளில் இயந்திசாலைகளில் மேற்கொண்ட கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்த ஒப்பந்ததாரர்களிற்கு மேலும் பணம் செலுத்த வேண்டியுள்ளது. அவற்றில் காணப்படும் பிரச்சினை காரணமாக இறுதி கொடுப்பனவை செய்வதற்கு முடியாதுள்ளதுடன் அதனால் நிறுத்தி வைத்த பணத்தை விடுவித்துக் கொள்ள முடியாதுள்ளது. | குறித்த பணிகள் பூர்த்தியானதாக உறுதி செய்து நிறுத்தி வைத்தல்களை தீர்க்க வேண்டும். |
| (ஐ) | சரியான நிதி முகாமைத்துவம் இல்லாததன் காரணமாக மீளாய்வாண்டினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்ட வங்கி மேலதிக பற்று காரணமாக ரூபா 4,360,217 ஆன மேலதிக பற்று வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2013, 2015, 2016 ஆண்டுகளில் இயந்திசாலைகளில் மேற்கொண்ட கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்த ஒப்பந்ததாரர்களிற்கு மேலும் பணம் செலுத்த வேண்டியுள்ளது. அவற்றில் காணப்படும் பிரச்சினை காரணமாக இறுதி கொடுப்பனவை செய்வதற்கு முடியாதுள்ளதுடன் அதனால் நிறுத்தி வைத்த பணத்தை விடுவித்துக் கொள்ள முடியாதுள்ளது. | சரியான நிதி முகாமைத்துவத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு விணைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022-2026 காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கோக்கிளாய் இல் புதிய இயந்திரசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2013 பெப்ரவரி 13 திகதி ரூபா 2.25 மில்லியனிற்கு 17.69 ஹெக்டேயர் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இயந்திரசாலை நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு | கோக்கிளாய் அகழ்வு அனுமதிப் பத்திரத்தை விரைவில் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் இந்த இயந்திரங்களை கட்டளையிட்டு இந்த ஸ்பைரல் இயந்திரம் செயலற்றதாக இருப்பதனை தவிர்க்க புல்முடை இயந்திரசாலையில் நிறுவப்பட்டது. அதன் ஸ்பைரல் பொருத்தப்பட்ட | கோக்கிளாய் கருத்திட்ட நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னர் அதே ஆண்டில் ரூபா 39,339,472 இற்கு ஒரு சுழல் இயந்திரம் (Spiral Machine) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரம் புல்முடை இயந்திரசாலையில் செயலற்ற நிலையில் இருந்தது. கோக்கிளாய் இயந்திரசாலைக்கு 2015 ஆண்டில் 117 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் கருத்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்காததுடன் அந்த ஆட்சேர்க்கப்பட்ட தொழிலாளர்கள் புல்முடை இயந்திசாலையில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2023-2026 காலப்பகுதியில் 100,000 மெட்ரிக் டொன் இல்மனைட் உற்பத்தி செய்யும் நோக்கில் கோக்கிளாய் கருத்திட்டத்தை நிறுவுவதற்கு கம்பனி திட்டமிட்டிருந்த போதும் அதற்காக மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பின்னர் இந்த இயந்திரங்களிலும் சில பிழைகள் இருந்ததுடன் அதனை தற்போது குறித்த தாய் கம்பனியுடன் கலந்துரையாடி அந்த பிழைகள் திருத்தப்பட்டு வருகின்றது. 2015 ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட 117 ஊழியர்கள் தற்போது இயந்திரசாலை மொத்த ஊழியர்கள் ஓய்வுபெறல், இராஜினாமா செய்தல் மற்றும் பணி நீக்கம் செய்யப்படல் காரணமாக வெற்றிடமாகவுள்ள தொழிலார் பதிவி கடமைகளிற்காக ஈடுபடுத்தியுள்ளதுடன் அதன் பிரகாரம் இயந்திரசாலையின் உற்பத்தி செயல்படுகளிற் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் நிறுவன உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இயந்திரசாலை நிர்மாணிக்கப்படவுள்ள காணி மண் மற்றும் பரல் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த கருத்திட்ட உத்தேசம் மற்றும் வியாபார திட்டம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | எதிர்வரும் 20 ஆண்டுகளுக்கு அகழ்வுத் திட்டத்தை சமர்ப்பிக்காததால் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் கோரப்பட்ட 7 புதிய ஆய்வு அனுமதிப் பத்திரங்களிற்கான விண்ணப்பங்கள் 2023 மே 25 திகதி நிராகரிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரை செயற்படும் அகழ்வு அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்து அகழ்வு மேற்கொள்வதை தவிர ஆய்வுகளை மேற்கொள்ளப்படுவதில்லை. | இந்த பிரதேசங்களை விரைவில் விடுவிக்க கைத்தொழில் அமைச்சினால் வன பாதுகாப்பு திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அமைச்சினால் அறிவுருத்தப்படும். மேலும் 7 கணிய மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டதுடன் அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப் பெறாததுடன் தற்போது அதற்குரிய Grid புதிய நடைமுறைகள் மீது புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் நடவடிக்கை செய்யப்பட்டு வருகிறது. | அகழ்வுத் திட்டமொன்றை தயாரித்து ஆய்வு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பொடுவாகட்டுப் பகுதியில் 0.5041 ஹெக்டயார் நிலத்தில் கணிய மணல் அகழ்வதற்காக பெறப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எவ்வித அகழ்வு நடவடிக்கை மேற்கொண்டு அல்லது அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்து இருக்காததால் இரத்தாகியிருந்ததுடன் அதற்காக செலவிட்ட ரூபா 1,284,500 தொகை | IML/A/HO/N/14732 கொண்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் பல சந்தர்ப்பங்களில் குறித்த நிலத்தில் உள்ள கரடுமுரடான மணலை அகற்ற நடவடிக்கைகளை திட்டமிடும் போது அப்பகுதி மக்களின் கடும் எதிர்ப்பின் காரணமாக கம்பனிக்கு அவ் வேலையை நிறுத்த வேண்டியிருந்தது. | அனுமதிப் பத்திரத்தை முறையாகப் பயன்படுத்தி அகழ்வு மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்ற செலவாக இருந்தது. | மேலும் இந்தப் பகுதி 300 மீற்றர் வரை காப்புச் செய்யப்படும் வகையில் IEE செய்யப்பட்டுள்ளதால் அகழ்வு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள தனியார் மற்றும் அரச காணிகள் எவை என்பதை கண்டறிந்து அதற்குரிய வரைபடங்களைக் வழங்கி தனியாரின் விருப்பத்துடன் பிரதேச செயலாளரின் விருப்பை பெற்ற பின்னர் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும். | |
| (ஈ) | 2018 ஆகஸ்ட் முதல் 2028 ஆகஸ்ட் வரையான 10 வருட செல்லுபடியாகும் காலத்திற்காக பொடுவாகட்டு மற்றும் தெய்விக்கல்லு ஆகிய பிரதேசங்களில் கணிய மணல் அகழ்விற்காக பெறப்பட்ட 02 அகழ்வு அனுமதிப்பத்திரங்களின் கீழ் மீளாய்வாண்டில் அகழ்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் கோகிலாய் இலிருந்து கொக்குகுடுவாய் வரையான கடற்கரை 1.368 ஹெக்டயாரில் கணிய மணல் அகழ்வதற்காக 2023 செப்டம்பர் 08 முதல் 2024 செப்டம்பர் 07 வரையான காலத்திற்கு ரூபா 18,395,247 செலவிடப்பட்டு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருந்த போதும் 2024 மே 31 வரை அகழ்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | இலக்கம் IML/ A/ HO-4047/ LR-7 கொண்ட பொடவகட்டு பிரதேசத்திற்காக பெறப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் 06 ஹெக்டயார் நிலப் பரப்பிற்கு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டுள்ளது. இந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்ட 100 மீற்றர் எல்லை 300 மீற்றர்களாக நீடித்துக் கொள்ள EIA மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த பகுதியில் காணப்படும் அரச மற்றும் தனியார் துறைக்கு சொந்தமான நிலங்களை கண்டறிந்து கொள்ள முதலில் நிலஅளவை பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>இலக்கம் IML- A- HO-4048- LR7 கொண்ட அனுமதிப் பத்திரம் தெவிக்கல்லு பகுதியை உள்ளடக்கிய வகையில் கம்பனியால் பெறப்பட்டுள்ளது. இந்த 100 மீற்றர் எல்லையை 300 மீற்றர் வரை அதிகரிக்க கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் IEE இனை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கியது. இந்தப் பகுதியிலுள்ள அரசுடமை காணிகளை விரைவில் பெற்றுக் கொள்ள அந்த காணிகள் உரித்துடைய அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருவதுடன் அந்த நிறுவனங்களின் அனுமதியைப் பெற்ற பின்னர் இந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும். கடற்கரையில் செயற்படும் மீன்பிடி நடவடிக்கைளிற்கு தாக்கம் ஏற்படுவதாக உதாரணம் காட்டி மீனவ மக்களிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக அந்நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டது. | அனுமதிப் பத்திரத்தை முறையாகப் பயன்படுத்தி அகழ்வு மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் 2018 ஆகஸ்ட் 15 முதல் 2028 பெப்ரவரி 20 வரை செல்லுபடியாகுமாறு புல்முடை கிராம சேவகர் பகுதியின் அரிசிமலை ஜின்னாபுரம் பகுதியில் கணிய மணல் அகழ்விற்காக இலங்கை கணிய மணல் கம்பனிக்கு இலக்கம் IML/A/HO/1623/LR/9 கொண்ட அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்ட அகழ்வு நில எல்லைகளிற்குரிய புவியியல் ஒருங்கிணைப்புகளுக்கு வெளியே அனுமதியற்ற அகழ்வுகளை மேற்கொண்டதாக அப்பணியகம் 2023 செப்டம்பர் 21 மேற்கொண்ட சுற்றிவலைப்பில் வெயிப்படுத்திக் கொண்டிருந்தது. அங்கு சுற்றாடல் ரீதியாக பாதுகாத்துக் கொள்ள வேண்டிய உணர்வுபூர்வ வலயமாக இனங்காணப்பட்டுள்ள கோக்கிளாய் களப்பு முதல் புல்முடை ரன்வெலி கடற்படை முகாம் வரையிலான முகத்துவார காப்புப் பகுதியை அனுமதியின்றி கம்பனியினால் அகழ்வு செய்திருந்தது.<br>இந்த அகழ்வு அனுமதிப் பத்திரத்தின் மீது மேற்கொள்வதற்கு முன்னர் பெறப்பட வேண்டிய கடற்கரை பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2023 ஆகஸ்ட் 21 திகதியுடன் முடிவடைந்த போதிலும் கம்பனி அத் திகதியின் பின்னரும் 9,623 மெட்றிக் டொன் கரடுமுரடான மணலை அகழ்ந்திருந்தது. | 2023 செப்டெம்பர் 21 திகதி புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் இலங்கை மினரல் சாண்ட்ஸ் நிறுவனம் அனுமதிப் பத்திர சட்டங்களை மீறி அகழ்வினில் சுற்றிவலைப்பு நடத்திய அலுவலர் அறிந்திருந்தது புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் வழங்கப்பட்ட ஆரம்ப அனுமதிப் பத்திரத்தை மாத்திரம் ஆவதுடன், அதற்கு 06 மாதங்களுக்கு பின்னர் குறித்த ஆரம்ப அனுமதிப் பத்திரம் திருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்ட இலக்கம் IML/A/HO/1623/LR/9 கொண்ட 2018.08.15 திகதிய கடிதம் பற்றி அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதன் பிரகாரம் உரிய கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரம 2018.02.20 திகதி வழங்கப்பட்ட போது 30 மீற்றர் அகலத்திற்கு 07 ஹெக்டெயருக்கு அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. ஆனாலும் பின்னர் மேற்கொண்ட கள பரிசோதனைகளின் போது அகழ்வு அனுமதிப் பத்திரம் 100 மீற்றர்களாக விரிவாக்க கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் அங்கீகாரம் அளித்துள்ளது. அதன் பிரகாரம் இலக்கம் IML/A/HO/1623/LR/9 கொண்ட 2018.08.15 திகதிய புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பானர் நாயகத்தின் கடிதம் மூலம் அகழ்வுப் பகுதியை மீண்டும் சுமுகநிலைக்கு ஆக்கி 18 ஹெக்டெயரிற்கு விரிவாக்கி 30 மீற்றர்களான அகலம் மீற்றர் 100 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | எரிபொருள் செலவை 50 சதவீதம் சேமிக்கும் வகையில் 2016 ஜூன் 30 திகதி உலர்த்தி இயந்திரமொன்றை இறக்குமதி செய்து அதற்கு ரூபா 45,120,142 செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரத்தை பயன்படுத்தக் கூடிய நிலைக்கு மாற்றி பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உலர் இயந்திரத்தை செயல்படு மட்டத்தில் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக 03 உள்நாட்டு கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டன. அந்த 03 கம்பனிகளால் உலர் இயந்திரத்தின் Burner, மென்பொருள் மற்றும் இயந்திரவியல் பாகங்கள் தற்போது பொருத்தப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் சில வாரங்களில் commissioning செய்த பின்னர் Zircon உற்பத்திக்காக பங்களிக்கப்படும். | முறையான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அகழ்வு செய்யப்படும் கணிய மணலின் தரத்தை அதிகரித்தல், அனுமதியற்ற போக்குவரத்து மற்றும் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதன் நோக்கில் ரூபா 264,784,592 பெறுமதியான இரண்டு நடமாடும் இயந்திர (Mobile Plant) ஆலைகளை 2022 நவம்பர் மாதத்தில் கம்பனியினால் கொள்வனவு செய்திருந்ததுடன் ரூபா 159,345,049 பெறுமதியான ஒரு இயந்தரம் 2023 ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பொடுவாகட்டு கருத்திட்டத்தில் நிறுவ திட்டமிட்டிருந்த போதும் 2024 ஏப்ரல் 30 திகதி வரை நிறுவப்படாமல் வளாகத்தில் விளைவற்று நிலவியது. | பொடவாகட்டு பகுதியில் ஏனைய இயந்திர ஆலைகளை நிறுவுவதற்கு காணியொன்றை விடுவித்துக் கொள்ள பிரதேச செயலாளரின் ஆலோசனையின் பேரில் பிரதேசத்தில் தற்போதுள்ள அரச நிறுவனங்களிடம் இருந்து No objection letter பெறப்பட்டது. அதன் பிரகாரம் எதிர்வரும் சில வாரங்களில், பிரதேச செயலாளரின் அங்கீகாரத்திற்கு கீழ் இந்த இயந்திர ஆலையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. | கொள்வனவு செய்த இயந்திரத்தை நிறுவி நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும். |
| (ஏ) | ஏனைய நடைமுறை சொத்தாக காண்பித்திருந்த 2006 ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை கிடைக்க வேண்டிய ரூபா 102,010,243 தொகையான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பெறுதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023/01/01 திகதி அறவிட வேண்டிய VAT மீள் செலுத்தல் மீதி ரூபா 132,923,572 ஆகும். 2023 ஆண்டில் ரூபா 33,634,766 பெறுமதியான பெறுமதி சேர்கப்பட்ட வரி மீள் செலுத்துதல் பெறப்பட்டது. இவற்றில் ரூபா 23,657,840 தொகையிலிருந்து செலுத்த வேண்டிய விரிக்காக பதிலீடு செய்துள்ளதுடன் ரூபா 9,976,926 தொகை இடமளிக்க முடியாத VAT வரியாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் பதிவழித்துள்ளது. மிக விரைவில் எஞ்சிய வரிப் பொறுப்பை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய வரியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் கம்பனியின் ஆய்வுகூடத்தில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் கரடுமுரடான மணலில் உள்ள கணிய மணலின் சதவீதம் 39 சதவீதத்திற்கும் குறைவாக இருந்ததுடன் "Block A" இயந்திர ஆலையினால் Tailings (வெள்ளை மணல்) ஆக 42 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையான அளவு அகற்றப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | 2023 ஆண்டு புல்முடை கடற்கரையை அன்டியதாக மாத்திரம் நீண்ட காலமாக கரடுமுரடான மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இங்கு குறிப்பிட்டுள்ள கணிமங்களின் சதவீதத்தினுள் 2023 ஆம் ஆண்டில் இல்மனைட் 53856 மெட்ரிக் டொன், ருடையில் 2350.25 மெட்ரிக் கொடன், ஹைடய் இலமனைட் 1899.50 மெட்ரிக் டொன் மற்றும் சர்கொன் 556.04 மெட்ரிக் டொன் உற்பத்தியை உருவாக்க கம்பனிக்கு முடிந்தது. | புதிய அகழ்வு நிலங்களை கண்டறிய வேண்டும். |
| (ஒ) | யான்ஓயா பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையிலுள்ள உத்தியோகபூர்வ இல்லமொன்று தவிசாளர் உத்தியோகபூர்வ இல்லமாக கம்பினியினால் 2021 மார்ச் 12 திகதிய இலக்கம் 2021/298/12 கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் | யான் ஓயா காணியின் உரிதி காணாமல் போனதால் காணியின் உரிமையை நிரூபிக்க முடியவில்லை. இதனை சட்ட ரீதியான சுற்றுலா விடுதியாக நடத்திச் செல்ல முடியாது. எனவே இப்பிரச்னையை தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு | உத்தியோகபூர்வ இல்லத்தை பயனுள்ள வேலையில் ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 9,393,420 செலவில் திருத்தியிருந்த போதும் இந்த உத்தியோகபூர்வ இல்லம் எவ்வித பணிகளிற்கும் பயன்படுத்தாது விளைவற்று விடப்பட்டிருந்தது. | வருகின்றன. தற்போது யான் ஓயா விடுதி ஆளணியினரிற்கு மற்றும் நிறுவனத்திற்கு சேவை வழங்குனருக்கு பணம் அறவிடும் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணியின் உரிமையை உறுதி செய்து கொண்ட பின்னர் சுற்றாடல் நேய சுற்றுலா வதிடுதியாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும். | |
| (ஓ) | மீளாய்வாண்டின் உற்பத்தி கிரயத்திற்கு செம்மையாக்கி இருந்த இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பான கம்பனியின் கொள்கையை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தவிர்க்க முடியாத காரணத்தால் நிலையான சொத்துக்கள் வருடாந்த கணிப்பீடு தாமதமானதுடன் 2024 ஜுலை 15 முதல் கணிப்பீட்டை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. | இருப்பு கொள்கைகளை சரியாக வெளிப்படுத்த வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கு முரணாக முகாமைத்துவ சேவை குழுவிற்கு (MM) உரிய இரண்டு பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விற்பனை முகாமையாளர் மற்றும் இராசயணவியாளர் ஆகிய உத்தியோகத்தர்களிற்கு சிரேஷ்ட முகாமையாளர் சேவை குழுவிற்கு (HM) உரிய ரூபா 120,175 வீதமும், கனிஷ்ட முகாமையாளர் சேவை குழுவிற்கு (JM) உரிய பதவியொன்றான நிருவாக உத்தியோகத்தர் பதவி வகிக்கும் ஒரு உத்தியொகத்தரிற்கு சிரேஷ்ட முகாமைத்துவ சேவை குழுவிற்கு (HM) உரிய ரூபா 105,760 வீதமும் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், கனிஷ்ட முகாமையாளர் சேவை குழுவிற்கு (JM) உரிய 3 பதவிகளில் சேவையில் ஈடுபட்ட இரண்டு உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்பளிற்கு, வழங்குனர் உத்தியோகத்தர் ஒருவரிற்கு மற்றும் கணக்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு முகாமைத்தவ சேவை குழு (MM) உரிய முறையே ரூபா 71,050, ரூபா 72,425, ரூபா 71,050 மற்றும் ரூபா 69,675 ஆகும் வகையில் சம்பளம் செலுதத்தப்பட்டிருந்தது. | சம்பளம் தயாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அதன் அறிக்கை பணிப்பளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கு பணிப்பாளர் சபையின் அறிவுருத்தலின் பிரகாரம் குறித்த அலுவலகரிற்கு பாதகம் இல்லாதவாறு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இலக்கம் LMS/ET/P/சம்பளம் வேற்றுமை கோண்ட 2024.06.06 திகதிய கடிதம் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்திற்கு கிடைக்கும் அறிவுரை பிரகாரம் எதிர் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கு முரணாக ஆட்சேர்க்கப்படக் கூடாததுடன் சரியான சம்பள அளவுத்திட்டங்களிற்கு இணங்க உரிய மட்டங்களில் வைக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேறற்றப்பட்ட பணிப்பொறுப்பு உள்ளடகிய செயலாற்றுகை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |